கழக இளைஞரணி செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் நேற்று முன்தினம் அண்ணா அறிவாலயத்தில் கழக முன்னாள் அமைப்பு செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் விருத்தாசலம் எம்.செல்வராஜின் தம்பி செல்வநாதன் விஜயலட்சுமி மகளும் கடலூர் மேற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எம்.எஸ். கணேஷ்குமார் தங்கை சுமதி கார்த்திகேயன் மகள் கிருத்திகா அமெரிக்காவில் உள்ள குயின்சி மாகாணத்தில் "President Education Award Program Outstanding Excellent First Rank Golden Award பெற்றதையொட்டி வாழ்த்து பெற்றார்.உடன் நெடுஞ்சாலை மற்றும் பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ. வேலு, நிதி மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் உள்ளனர்.

சென்னை, சேப்பாக்கத்தில் உள்ள, மாநில அவசர கால செயல்பாட்டு மைய கூட்ட அரங்கில் நேற்று (28.08.2024) வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் தலைமையில் அனைத்து மாவட்ட வருவாய் அலுவலர்களுடன் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ. அமுதா, நில நிர்வாக ஆணையர் டாக்டர். கே.எஸ். பழனிசாமி, நில சீர்திருத்த ஆணையர் த.ந. ஹரிஹரன், நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்குநர் ப. மதுசூதன் ரெட்டி, தமிழ்நாடு அரசு தொழில் முன்னேற்றக் கழக மேலாண்மை இயக்குநர் கே. செந்தில்ராஜ், சமூக பாதுகாப்பு திட்ட இயக்குநர் க.வீ. முரளிதரன், பேரிடர் மேலாண்மை, தமிழ்நாடு அபாயக் குறைப்பு முகமை இயக்குநர் வ. மோகனசந்திரன். மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

பி.எம்.ஸ்ரீ நிதி திட்டத்தில் இணைந்தால் உடனே நிதி தருகிறோம்!

புதிய கல்விக் கொள்கையில் இணைய தமிழ்நாடு அரசுக்கு ஒன்றிய அரசு அழுத்தம்!

திருச்சியில் – அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேட்டி!

திருச்சி, ஆக.29-

அரசு பி.எம். ஸ்ரீ நிதி திட்டத்தின் மூலம் புதிய கல்விக் கொள்கையில் இணைய தமிழ்நாடு அரசுக்கு அழுத்தம் கொடுக்கிறது ஒன்றிய அரசு. என்றும் பிஎம்ஸ்ரீ நிதி திட்டத்தில் இணைந்தால் உடனே நிதி தருகிறோம் என ஒன்றிய கல்வித்துறை அமைச்சகம் தெரிவிக்கிறது என்றும் கடந்த ஆண்டுகளில் தமிழ் நாடு அரசு கேட்ட நிதியை விட குறைவான நிதியையே ஒன்றிய அரசு கொடுத்துள்ளது என பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேட்டியில் தெரிவித்துள்ளார்.

பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி திருச்சியில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு :-

இந்த ஆண்டிற்கான முதல் தவணை நிதியை கூட தற்போது வரை

கொடுக்காமல், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேட்கும் பொழுது கூட புதிய கல்விக் கொள்கையைக் கொண்ட பி.எம்.ஸ்ரீ. நிதி திட்டத்தில் இணைய வேண்டும் என ஒன்றிய அரசு தெரிவிக்கிறது.

தொடர்ந்து பள்ளிக் கல்வி துறையில் முன்னேறி வரும் தமிழ்நாடு அரசுக்கு அழுத்தம் தரும் வகையில் இது போன்ற நடவடிக்கைகளில் ஒன்றிய அரசு ஈடுபடுகிறது.

ஒன்றிய அரசு நிதியை வழங்காதது தமிழ்நாடு அரசுக்கு நிதி சுமையைதான் ஏற்படுத்தி இருக்கிறது.

எனினும் தமிழ்நாடு அரசை நம்பி உள்ள ஆசிரியர்களுக்கு எந்த தடையும் இன்றி ஊதியம் வழங்க உரிய நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறோம்.

இதனால்தான் கல்வியை மாநில பட்டியலில் கொண்டு வர வேண்டும் என்றும், எங்களுக்குத் தேவையானவற்றை நாங்கள் செய்து கொள்வோம் என்ற நோக்கில் கல்வியை மாநில பட்டியலுக்கு கொண்டு வர வேண்டும் என தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம்.

இவ்வாறு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்தார்.

கடந்த ஐந்து ஆண்டுகளில் சமகரா சிக்ஷா திட்டத்தின் கீழ் ஒன்றிய அரசு, தமிழ்நாட்டின் கல்வித் துறைக்கு ரூபாய் 8 ஆயிரத்து 971 கோடி நிதி ஒதுக்கிதந்துள்ளது. 2021 - 22 ஆம் கல்வி ஆண்டில் 1,598 கோடி நிதியும், 2022 - 23 ஆம் கல்வி ஆண்டில் அதிகரித்து, ரூ2,107 கோடி நிதியும் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்தை தமிழ்நாடு அரசு முறையாக நடைமுறைப்படுத்தாததால் திட்டத்துக்கான நிதி ரூபாய் 1,876 கோடியாக குறைக்கப்பட்டுவிட்டது என பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை தனது எக்ஸ் வலைதள பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

இது உண்மைக்கு புறம்பானது என்றும், மாநில அரசு பல்வேறு பெயர்களில் மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கான திட்டங்களை செயல்படுத்தி வருகிறது என்றும், மாநில அரசு கோரிய நிதியை முழுமையாக ஒன்றிய அரசு கொடுக்க மறுக்கிறது என்றும் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி குற்றம் சாட்டியுள்ளார்.

சென்னை அரசு அருங்காட்சியகத்தில்

"பண்பாடு - ஒரு மீள்பார்வை" கருத்தரங்கம்!

அமைச்சர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்தார்!

சென்னை, ஆக.29-

சென்னை, எழும்பூர், அரசு அருங்காட்சியக கலையரங்கில் நேற்று (28.08.2024) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அருங்காட்சியகங்கள் துறை சார்பில் நடைபெற்ற பெருநகர சென்னையின் பெருமை பேசும் கொண்டாட்டங்கள் தொடர்பான "பண்பாடு ஒரு மீள்பார்வை" என்ற கருத்தரங்கை துவக்கி வைத்து, விழாப்பேருரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்தர மோகன், அருங்காட்சியகங்கள் துறை இயக்குநர் திருமதி கவிதா ராமு மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

அமைச்சர் மு.பெ.சாமிநாதன் ஆற்றிய உரை வருமாறு :-

சென்னை அரசு அருங்காட்சியகத்தில் பெருநகர சென்னையின் பெருமையைப் பேசும் விதமாக 'சென்னை தினம்' கொண்டாடப்பட்டு வருகின்றது. பொதுவாக சென்னை தினம் என்பது, என்னவென்றால் 1639 ஆம் ஆண்டு ஆகஸ்டு 22 ஆம் நாள் தற்போது புனித ஜார்ஜ் கோட்டை அமைந்துள்ள நிலப் பரப்பை ஆங்கிலேயர்கள் வாங்கினார்கள். அந்த நாள் இதுவரை சென்னை தினமாகக் கொண்டாடப்படுகிறது. சென்னைக்கு 385 ஆவது பிறந்த நாளை பெருமையாக அருங்காட்சியகம் கொண்டாடி வருகிறது. இதற்காக ஆகஸ்டு 20 ஆம் தேதி முதல் 29 ஆம் தேதி வரை சிறப்புக் கண்காட்சி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சிறப்புக் கண்காட்சியில் சென்னை 385 ஆண்டுகள் மட்டும் பழமையானதல்ல இலட்சக்கணக்கான ஆண்டுகள் பழமை வாய்ந்தது என்பதை மெய்ப்பிக்கும் விதமாக இலட்சக்கணக்கான ஆண்டுகள் பழமை வாய்ந்த ராபர்ட் ஃபுரூஸ் ஃபுட் கண்டெடுத்த பழைய கற்கால கருவிகள், இரண்டாயிரம் ஆண்டு பழமை வாய்ந்த கீழடி அகழாய்வில் கிடைத்த மட்கலன்கள் ஆகியன இடம் பெற்றுள்ளன. கண்காட்சியில் எம்டன் கப்பல் சென்னை மீது எறிந்து விட்டு சென்ற வெடிகுண்டுகளின் எச்சங்கள் மற்றும் இசைக் கருவிகள், இன்றைய தலை முறையினர் அறிந்திராத தோலா, எடைக் கற்கள். மரக்கால், படி போன்ற அளவைகள் அழகாக காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. மேலும் பழங்காலத்தில் பயன்படுத்தப்பட்ட வாட்கள், பீரங்கிக் குண்டுகள் ஆகியன சிறப்பு மிக்கவை.

இனிய தமிழ் மொழி இயல், இசை, நாடகம் என மூன்றாக பிரிந்திருப்பது போல சென்னை தின கொண்டாட்டங்கள் கண்காட்சி வடிவிலும், கலை நிகழ்ச்சிகள் வடிவிலும் கருத்தரங்கு வடிவிலும் மூன்று வகையாக கொண்டாடப்பட்டு வருகின்றன. இன்றைய தினம் சென்னையின் பெருமையை போற்றும் விதமாக "பண்பாடுஒரு மீள் பார்வை" என்ற தலைப்பில் சென்னையின் தொன்மை பேசும் ஒரு கருத்தரங்கம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த கருத்தரங்கத்தில் தொல்லியலாளர்கள், நாணயவியல், அறிஞர்கள், கட்டடக் கலை வடிவமைப்பாளர்கள் கலந்துக் கொண்டு தங்கள் துறைபோகிய அனுபவங்களை நம்மிடையே பகிர்ந்து கொள்ள வந்துள்ளனர்.

இவ்வாறு அவர் பேசினார்.

பின்னர் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு :-

அருங்காட்சியகத்தில் கடந்த 20ஆம் தேதியிலிருந்து வருகின்ற 29ஆம் தேதி வரை கண்காட்சி நடைபெற்று வருகிறது. நம்முடைய பெருமைக்குரிய சென்னை மாநகரம் எப்போது துவங்கப்பட்டது, அதனுடைய வரலாறும், அதேநேரத்தில், இந்தியாவிலேயே இரண்டாவது அருங்காட்சியகமாக சிறந்து விளங்கக்கூடிய, பெருமை பேசக்கூடிய வகையில் எழும்பூரில் உள்ள சென்னை அருங்காட்சியகம் அமைந்திருக்கிறது. வரலாற்றில் தெரிந்து கொள்ளக்கூடிய வகையில் மாணவச் செல்வங்கள் கலந்து கொள்ளக்கூடிய நிகழ்வாக இந்த கருத்தரங்கு துவக்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில் இக்கருத்தரங்கம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதே போல கலை, பண்பாடு என்பது தமிழருடைய பண்பாடு, இந்தியாவிலேயே இரண்டாவதாக சென்னை அருங்காட்சியகம் விளங்கிக் கொண்டிருக்கிறது.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து துறை சார்பில், ஒரு நாள் ஆன்மீக சுற்றுலா சேவையை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை தா.மோ.அன்பரசன் கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் கலைச்செல்வி மோகன், காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி.எழிலரசன், மாநகராட்சி மேயர் எம்.மகாலட்சுமி யுவராஜ் ஆகியோர் உள்ளனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நல்வாழ்த்துகளுடன் - கழக பொதுக் குழு உறுப்பினர்

வைகை எம்.பரமன் இல்ல மணவிழா! அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ஆர். நடத்தி வைக்கிறார்!

கோ.தளபதி எம்.எல்.ஏ. - அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் தலைமை!

அமைச்சர்கள் ஐ.பெரியசாமி - தங்கம் தென்னரசு - பி.மூர்த்தி - வாழ்த்துரை!

மதுரை, ஆக. 29 -

தி.மு.கழக பொதுக்குழு உறுப்பினர் வைகை எம்.பிரமநாயகம் (எ) பரமன் - மீனாட்சி சுந்தரி (எ) வசந்தி ஆகியோரின் புதல்வர் பி.சரவண மாணிக்கம் - கேரள மாநிலம், மீனாட்சிபுரம் நெல்லிமேடு பெருமாள் சாமி - பத்மாவதி ஆகியோரின் புதல்வி பெ.வினோதினி ஆகியோரின் மணவிழா நாளை (30.8.2024 வெள்ளிக் கிழமை) காலை 7.55 மணியளவில் மதுரை மேலூர் மெயின் ரோடு மடீட்சியா மஹாலில் நடைபெறுகிறது.

இம்மணவிழாவிற்கு மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் ஆகியோர் தலைமை வகிக்கின்றனர்.

மணவிழாவினை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்துகிறார்.

அமைச்சர்கள் ஐ.பெரியசாமி, தங்கம் தென்னரசு, பி.மூர்த்தி, எஸ்.ரகுபதி, கே.ஆர்.பெரியகருப்பன், அனிதா ராதாகிருஷ்ணன், இராஜகண்ணப்பன், அர.சக்கரபாணி, மாவட்டச் செயலாளர்கள் மு.மணிமாறன், ஐ.பி.செந்தில்குமார் எம்.எல்.ஏ., டி.பி.எம்.மைதீன் கான், இ.ராஜா எம்.எல்.ஏ. காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ., மேயர் இந்திராணி பொன்வந்த் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

வ.வேலுசாமி, பெ.குழந்தைவேலு, எம்.பி.க்கள், டி.எம்.செல்வகணபதி, சு.வெங்கடேசன், பி.மாணிக்கம் தாகூர், தங்க தமிழ்ச்செல்வன், டாக்டர் ராணி ஸ்ரீகுமார், கே.நவாஸ்கனி ஆகியோர் வரவேற்கின்றனர்.

இம்மணவிழாவில் பொன்முத்து ராமலிங்கம், கம்பம் செல்வேந்திரன், காந்தி ராஜன் எம்.எல்.ஏ., சுப.தங்கவேலன், கே.கே.எஸ்.வி.டி.சுப்பராஜ், ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன் எம்.எல்.ஏ., மு.தென்னவன், கே.எம்.விஜயகுமார், எஸ்.தங்கப்பாண்டியன் எம்.எல்.ஏ., சத்தியமூர்த்தி, தனுஷ்கோடி, ஜி.வி.மார்க் கண்டேயன் எம்.எல்.ஏ., டாக்டர் எஸ்.சுந்தர்ராஜன், கே.எம்.விஜயகுமார், ஏ.ஆர்.ஆர்.ரகுராமன், எம்.எல்.ஏ., ஆ.தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ., வி.பி.ராஜன், ஆர்.ராமகிருஷ்ணன், ஏ.வெங்கடேசன் எம்.எல்.ஏ., எல்.மூக்கையா, ஏ.மகாராஜன் எம்.எல்.ஏ., இரா.ராஜா அருண்மொழி எம்.எல்.ஏ., எம்.முருகவேல், எம்.பூமிநாதன் எம்.எல்.ஏ., லதா அதியமான், எப்.எம்.ராஜரத்தினம், எம்.முத்துராம லிங்கம், மாவட்டக் கழக நிர்வாகிகள் எம்.ஜெயராம், கே. தனச்செல்வம், மா.ஒச்சு பாலு, ஜெ.மூவேந்திரன், சி.சின்னம்மாள், எஸ்.ராஜசேகரன் (எ) ராகவன், ஆர்.முருகவேல், ஆர்.சௌந்திரராஜன் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் பங்கேற்று மணமக்களை வாழ்த்துகின்றனர்.

பிரமநாயகம் (எ) வைகை பரமன் நன்றி கூறுகிறார்.

ஏ,ஆர்.பி.எம்.காமராஜ் தலைமை! க.வே.மோகன் அறிக்கை!

க.வே.செழியன் 2 ஆம் ஆண்டு நினைவு நாள் : உணவு - நல உதவிகள் வழங்கல்!

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் - நே.சிற்றரசு - தயாநிதிமாறன் எம்.பி. - அன்பகம் கலை பங்கேற்பு!

சென்னை, ஆக.29-

திருவல்லிக்கேணி பகுதி அவைத் தலைவர் மறைந்த க.வே.செழியனின் இரண்டாம் ஆண்டு நினைவு நாளையொட்டி சமபந்தியும், நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியும் 31.8.2024 காலை 11 மணியளவில் வி.எம். 2-வது லேனில் நடைபெறுகிறது.

இது குறித்து 119-வது வட்டச் செயலாளர் க.வே. மோகன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

திருவல்லிக்கேணி பகுதி செயலாளர் ஏ.ஆர்.பி.எம். காமராஜ் எம்.சி. தலைமை தாங்குகிறார்.

மாவட்ட து.செயலாளர் ஆர்.என்.துரை, பி.ஏ. வி.என். ராஜன், டாக்டர். அ.சுபேர் கான், டாக்டர். அபிஸ் யுல்லா ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கே.திருநாவுக்கரசு, ரவி ராஜ்குமார், ஆர்.பத்மாவதி, ஆர்.ரஞ்சித்குமார், எல்.பாலு, எஸ்.ரவீந்திரன், க.பாலாஜி, இ.மாரி, ஜி.சேகர் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு, தயாநி

திமாறன் எம்.பி., கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, வி.பி.பொன்னரசு, ப.பிரகாஷ், ஏ.விஜயகுமார், இ.இளம்பாரதி, எம்.கே.ஆனந்த், பகுதி நிர்வாகிகள் ம.தயாநிதி, சி.தினகரன், எம்.பிரேம் ராஜா, மங்கை ராஜ்குமார், வட்டச் செயலாளர்கள் ஐசி எஃப்.எம்.சங்கர், ஜே.விஜயகுமார், என்.ரவி கே.ஜி.செந்தில் குமார், எஸ்.சசிகுமார், லைனர் கே.பிரபு,

மாவட்ட பிரதிநிதிகள் எம்.கலில்ரகுமான், ஆர்.ராஜ்குமார், ஆர்.சசிகுமார், வெ.சீனிவாசன், ஆர்.கஜேந்திரன், மா.பச்சையப்பன், எஸ்.விஜயகுமார், ஏ.பி.வேலு, எல்.துளசிராமன், பகுதி அமைப்பாளர்கள் ஏ.ஆர்.பி.எம். டாக்டர் சீனிவாசன், வி.தினேஷ்குமார், ஏ.விக்னேஷ்வரன், போட்டோ ராஜா, கு.சரவண குமார், ஏ.மோகன், டி.எம்.முகமது அலி, எம்.சுமதி, வி.தேச ராணி, எம்.அஷ்வினி . மாவட்ட துணை அமைப்பாளர்கள் ஜெ.கதிரேசன், ஆர்.கணேசமூர்த்தி, ஆர்.ஷியாம் குமார், எம்.தியாகு, எம்.அன்பு, ஏ.பாபு, ஆர்.ராமலிங்கம், ஜி.பிரவீன்குமார். எம்.கே.மூர்த்தி, பி.பாலாஜி, எம்.கோபி, மோ.பிரபு, கே.ஜெகன், ஏ.செல்வம், டி.சதீஷ் குமார், டி.ராஜ்குமார், டி.கபாலி, எச்.தஸ்து, டி.செபாஸ்டின், ஆர்.பாஸ்கர், வி.கிருபா கரன், பா.ராஜ்குமார், பா. ராஜ்கமல், பா.ராஜ் கமல், ஆர்.அருண்குமார், எஸ்.சதீஷ்குமார், ப.அருண்குமார், வி.சீனிவாசன்

119 வது வட்ட கழக நிர்வாகிகள் பி.முனுசாமி, டி.லூர்து, பி.சிவா, வி.பால சுப்பிரமணி, கே.தினேஷ். ஆர்.பாஸ்கர், எஸ்.என்.கபாலிதாசன், டி.பாஸ்கர், பி.டி.சி.வே.மணி, ஏ.டோமினிக், ராஜேந்திரபாபு, எஸ்.சதீஸ்குமார், எச்.நந்தகுமார். இ.குமரன், ஆர்.உதயகணேஷ், கே.புஷ்பராஜ், என்.வாசு, எச்.நூருல்லா, வி.ஜீவா, ஆர்.அப்பு, ஒய்.காதர்பாஷா. இ.துளசி, என்.பாபு, ஜி.ரமேஷ்குமார், செந்தில் ஆறுமுகம், டெம் போபாலு, துறைமுகம்ராஜி, எம்.ஞானவேல், டி.சிம்பு, பி.மணிகண்டன், ஆர்.வினோத்,

ஆர்.ராஜேஷ், கே.கர்ணா, கே.ராகுல். இ.குமார் ஜே. உசேன், சைய த்பாய், ராஜி, ருத்திரகுமார், ஏ.இக்பால், மகி, சுரேஷ், சுனில், சி.வர்கீஸ், சுபாஷ், வாஜித், யா. ரஹீம், ஆர்.பிரகாஷ், முன்னா, சிவக்குமார், கௌதம், ரஹமத்துல்லா, பாபுபாய், எம்.செல்வராஜ், சி.சசி, எம்.கார்த்திக், குட்டி குமார். சுப்பிரமணி, மஸ்தான், சி.தேவேந்திரன், டெய்லர்மணி, ஜெ.ராஜகோபால், புருஷோத்தமன், விஜயகுமார், இந்திரா (எ) புல்லு, ஐ.பானுமதி, எஸ்.பாளையம், எஸ்.ஜீனத், கே.செல்வி, எம்.சித்ரா, பி.மரகதம், வி.ரேவதி, எம்.தேவிலட்சுமி, எம்.விஜயா, ஏ.வாஜிதா. எம்.தேவி, கே.கலாவதி, எஸ்.தில கவதி, கே.மாலா, முனீரா பேகம் மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர்.

டி.ஜெயகுமார். ஆர். கோபு. பி.ஏழுமலை, எஸ். மகேஸ்வரி, ஆர்.சரவணன்

வழக்கறிஞர் ராஜேஷ். மு.கதிரவன். பி.திவ்யா. என். ஆஜிரா. பி.கௌரி ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.



கழகத் தலைவர் அவர்களின் உற்ற நண்பர் மேனாள் சட்டமன்ற உறுப்பினர்அன்பில் பொய்யாமொழி அவர்களின் 25ஆம் ஆண்டு நினைவு நாளில், திருச்சி தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தில், மாவட்டச் செயலாளர் – அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, அன்பில் பொய்யாமொழி அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் துரை வைகோ, திருச்சி மாநகர கழகச் செயலாளர் மு.மதிவாணன், மாவட்டக் கழக நிர்வாகிகள் சேகரன், சபியுல்லா, செந்தில், பகுதி செயலாளர் மோகன் ஆகியோரும் கலந்து கொண்டார்கள்.